## இலங்கை வெளிநாட்டு தொழில்வாய்ப்புப் பணியகம் (தனியார்) கம்பனி – 2016

இலங்கை வெளிநாட்டு தொழில்வாய்ப்பு பணியகம் (தனியார்) கம்பனியின் (''பணியகம்'') 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் மீளாய்வாண்டின் கம்பனியின் செயலாற்றல் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென பணிப்பாளர் சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கிறாரேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவதத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட இலங்கை வெளிநாட்டு தொழில்வாய்ப்புப் பணியகம் (தனியார்) கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாட்டு பணியகங்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 2,231,566 மீதிகளில் உள்ளடங்கியிருந்த 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுடன் தொடர்புடைய ரூபா 612,657 கூட்டுத்தொகையான தொகையொன்று மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை நோய்வாய்ப்பட்ட புலம்பெயர்ந்தவர்களுக்காக காப்புறுதி கம்பனிகளிடமிருந்து பணியகத்தினால் பெறப்பட்ட ரூபா 4,750,687 தொகையான மரண இழப்பீடுகள் உரிய தரப்பினருக்கு செலுத்தாமலோ அல்லது வேறொரு உரிய நடவடிக்கை எடுக்காமலோ நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(இ) 2006-2007 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது பணியகத்தினூடாக கொரியாவிற்கு இடம்பெயர்ந்த இலங்கை ஊழியர்களிடமிருந்து மீள்நிதியிடப்பட்ட மற்றும் பெறப்பட்ட ரூபா 16,610,000 தொகையான பிணை வைப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கு 2016 திசெம்பர் 31 இலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பல ஆண்டுகளாக முன்கொண்டுவரப்பட்ட ரூபா 2,350,520 தொகையான ஏனைய கடன்பட்டோர்கள் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பணியகத்தின் நிதிசார் விளைவுகள் ரூபா 2,008,515 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 896,118 ஆனமையால் மீளாய்வாண்டின் போது நிதிசார் விளைவுகளில் ரூபா 1,112,397 முன்னேற்றமொன்றை காட்டுகின்றது. மருத்துவ (நிலையங்களின் செலவீனங்கள்) ரூபா 3,252,615 ஆலும் ஏனைய நிர்வாகச் செலவினங்கள் ரூபா 4,908,498 ஆலும் அதிகரித்திருந்த போதிலும், ரூபா 11,113,093 இனால் வருமானம் அதிகரித்தமையின் காரணமாக நிதிசார் விளைவுகளில் வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

தொழில்சார், நிர்வாகம், தொழில்நுட்பம் மற்றும் கைத்தொழில் திறமைகள், அரை திறமையான அல்லது திறனற்ற போன்ற சகல வகைகளைச் சார்ந்த ஊழியர்களுக்கு தொழில்கள் வழங்குதல் அல்லது ஆட்சேர்ப்பு மற்றும் ஊழியர் பயிற்சிகளினை வழங்கல் மற்றும் நியதிச்சட்ட சட்டங்கள் மற்றும் விதிகளுக்குஇணங்க பேணிச்செல்லல் பணியகத்தின் பிரதான நோக்கங்களாகும்.

மேறகுறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைவது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் வெளிநாட்டு சேவைகள் பணியகத்தால் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினூடான வெளிநாட்டு நடவடிக்கைகளை ஒப்பிடும் போது முன்னைய 04 ஆண்டுகளில் பணியகத்தினூடான வெளிநாட்டு நடவடிக்கைக்கு அரச நிறுவனமொன்றின் பங்களிப்பு போதியற்றதாக இருந்தமையால் வெளிநாட்டு வேலை சந்தைக்கான வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களின் பங்களிப்பால் முகவரால் ஏற்பட்ட அளவீடானது 01 சதவீதத்தை விட குறைந்த பெறுமதியாகவிருந்தது.

(ஆ) முகவரால் வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையின் வழமையான வளர்ச்சியை 2013 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் காணக்கூடியதாக இருந்தபோதும், வேலைக்கு வழிநடத்தப்பட்ட நாடுகளின் எண்ணிக்கை 15 இலிருந்து 06 ஆல் படிப்படியாக குறைவடைந்திருந்தது.

(இ) 2016 ஆம் ஆண்டில் முகவரால் வேலைகளிற்காக 820 இடம்பெயர்ந்தவர்கள் அமர்த்தப்பட்டிருந்த போதிலும், அதில் 787 நபர்கள் அல்லது 96 சதவீதம் 03 நாடுகளிற்கு மாத்திரம் சென்றிருந்தனர். முகவரால் வேலைக்கான கேள்வியை அதிகரிப்பதிலும் ஏனைய நாடுகளிலிருந்தான சந்தர்ப்பங்களை அதிகரிப்பதிலும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முகவரால் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக ஊழியர்களிற்கு வழிகாட்டலில், தொழிற்சந்தையில் முறையே 78, 39 மற்றும் 13 துறைகளில் வழிகாட்டப்பட்டிருந்தனர். எனினும், வேலைவாய்ப்பின் 2,430 துறைகள் வெளிநாட்டு தொழிற்சந்தையில் நிலவியிருந்த போதிலும், முகவர் வேலைவாய்ப்பின் சில துறைகளிற்காக மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தனர்.

(உ) 2016 ஆம் ஆண்டின் போது பணியகத்திற்குரிய 22 ஊழிய கட்டளைகளினூடாக 3,138 வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள் பெறப்பட்டிருந்த போதிலும், 820 இடம்பெயர்ந்தவர்கள் மாத்திரம் பல்வேறு வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களிற்காக வெளிநாட்டுக்கு செல்ல முடியும். அதற்கிணங்க, பணியகம் 2,318 வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள் அல்லது 74 சதவீத ஊழியர்களை வழிநடத்துவதற்கு தவறியிருந்தது.

அதற்கிணங்க, வெளிநாட்டு தொழிற்சந்தைக்கு ஊழியர்களை வழிநடத்துவதற்காக முறையான மற்றும் நியாயமான முறைமை பணியகத்திடம் காணப்படுகின்றது என்பது கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை.

(ஊ) வெளிநாட்டு வேலைவாய்ப்பின் வகைப்படுத்தலுடன் 2016 ஆம் ஆண்டு வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்ட ஊழியர்களுடன் ஒப்பிடும் போது உள்நாட்டு வேலையின் ஊழியர்கள் மற்றும் விவசாய உதவியாளர்கள் போன்ற பயிற்சியளிக்கப்படாத துறைகளிற்காக முகவரிடம் மிகையான போக்கு இருந்த போதிலும், உள்நாட்டு தொழிற்சந்தையிடமிருந்து தொழில்சார் தகைமைகளுடன் பயிற்சியளிக்கப்பட்ட நபர்கள் தேடுவதற்கு போதிய மேம்படுத்தல் முறைமை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் பணியகத்திற்கு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | கடன்பட்டோர்கள் மீதிகளினை அறவிடுவதற்கு மற்றும் கடன்கொடுத்தோர்கள் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | வருமான உழைப்பு | பணியகத்தின் பெறப்பட்ட ஊழியர் கட்டளைகளுக்கு அதிகூடிய ஊழியர் பங்களிப்பொன்றை வழங்குவதனூடாக வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) | மனித வளங்கள் மற்றும் பௌதீக வளங்களின் கட்டுப்பாடு | மனித மற்றும் பௌதீக வளங்கள் உத்தமத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்காமை. |